DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 25/2024 Crime No. 70/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW1- கந்தசாமி | Village | |
| Father Name | கருப்பண்ணகவுண்டர் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 04.06.2024 |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை-**

நான் குளத்துக்காட்டில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 15.06.2023 ம் தேதியன்று, மாலை சுமார் 06.30 மணியளவில், நான் அத்தானியிலிருந்து எனது வீட்டிற்கு ஆப்பக்கூடல்-சக்தி ரோட்டில், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது ஓடைமேடு, திருமலைசாமி வீட்டின் அருகில் நான் சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தேன். அப்போது எதிர் திசையில் மேற்கிலிருந்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த டிராக்டர் என் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டது. விபத்தில் நான் மயக்கம் அடைந்துவிட்டேன். அங்கிருந்தவர்கள் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக கோபி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் விபத்தில் மயக்கம் அடைந்துவிட்டதால், டிராக்டரை ஓட்டி வந்த நபரை அடையாளம் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**